தற்போது தயாரித்து வருகிறார். மாநில அரசு கேட்டுக் கொண்டதன் பேரில், தமிழ்நாடு முழுவதிலும் தற்போது செயலிலுள்ள பால்வழங்கு முறையை ஆராய்வதற்காகவும் மாநிலம் முழுவதற்குமாகப் பெருந்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காகவும் தேசியப் பால் பண்ணை மேம்பாட்டு வாரியம், வல்லுநர்கள் குழு ஒன்றை அனுப்பியுள்ளது. இம் மாநிலத்தில் பால் வழங்குமுறை பற்றிய பெருந்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக தேசியப் பால் பண்ணை மேம்பாட்டு வாரியம் செய்யும் ஆய்வின்கீழ் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும் வரும்.

THIRU K. VINAYAKAM : May I know whether the milk produced in Thanjavur and Tiruchirappalli will be made available for sale only in those districts or will it be sent to Madras to make good the deficit supply in the City of Madras?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தேசியப் பால்பண்ணை மேம்பாட்டு வாரியத்தின் அறிக்கை இன்னும் அரசாங்கத்திற்கு வந்து சேரவில்லை. அதற்குப் பிறகுதான் எதைப்பற்றியும் சொல்ல முடியும்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், தஞ்சை ஜில்லாவிலே தேசீயத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பால் அபிவிருத்தித் திட்டம் மத்திய சர்க்காரால் ஆரம்பிக்கப்படுகிறதா? அல்லது மாநில அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படுகிறதா? அப்படியென்றால் எத்தனை கோடி ரூபாய் அளவில் பூர்வாங்க ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இது மாநில சர்க்காரின் திட்டம்தான். தேசீயப் பால்பண்ணையின் உதவியைக் கேட்டிருக்கிறோம். நிபுணர் குழு பரிசீலித்து அறிக்கையை இன்னும் அனுப்பாமல் இருக்கிறார்கள். அறிக்கை வந்தபிறகு முடிவு செய்யப்படும்.

Inspection of check-posts

* 206 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleaesd to state—

(*a*) whether suprise inspection of check-posts has been made by the Hon'ble the Minister at various places about the 21st June, 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) 18—6—1969 தேதி அன்று தர்மபுரி மாவட்டத்திலுள்ள சிங்காரபட்டியில் அமைந்திருக்கும் மாவட்டங்களுக்கிடையிலுள்ள சோதனைச் சாவடியிலும், பொம்மாண்டபள்ளி, ஹோசூர், பகலூர் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் மாநிலங்களுக்கிடையிலுள்ள சோதனைச் சாவடிகளிலும் திடீர் ஆய்வு செய்யப்பட்டது.

இச்சோதனைச் சாவடிகளிலும் உணவு அமைச்சர் சோதனையிட்ட மற்ற சாவடிகளிலும் சரிவர கடமையாற்றாதவர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: செக் போஸ்ட்களிலே அதிகார பூர்வமற்ற கடத்தலைக் கண்டுபிடித்து அதைத் தண்டிக்க இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திடீரென்று சோதனை போட்டோம். அங்கு சரிவர நடவடிக்கைப் பணியில் ஈடுபடாதவர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக, அந்தந்த மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: இந்த உணவு அமைச்சரவர்கள் மாறுவேடம் போட்டு சோதனை போட்டார்களா? அப்படியென்றால் மாறுவேடம் போட்டுவிட்டது எந்த ஆர்ட்டிஸ்ட் என்று தெரிந்து கொள்ளலாமா? வருகிற வருஷம் நாம் மாறுவேடப் போட்டிகள் நடத்த வேண்டியிருப்பதற்காக, அந்தத் தகவலைத் தந்தால் பிரயோஜனமாக இருக்கும். எனவே, அந்த ஆர்ட்டிஸ்டின் பெயரைத் தயவுசெய்து வெளியிடுவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நான் எந்த மாறுவேடமும் அணிந்து கொண்டு போகவில்லை. எப்பொழுதும் இருக்கும் ஒரே வேடத்தோடுதான் போனேன். பத்திரிகையிலே அப்படிச் செய்தி திரித்துப் போட்டது என்னுடைய தவறு அல்ல.

THIRU B. VENKATASWAMY: Sir, there is a wide rumour among the people that the check-posts are not functioning properly even though surprise checks have been made by the Hon. Minister for Food. By that we are losing so much of revenue to our State. Will the Goverenment come forward to tap all such resources by reorganising the present system of check-posts?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்பொழுதிருக்கும் அந்தச் சோதனைச் சாவடிகளைத் திருத்தி அமைப்பதற்காகத்தான் ஆயுதம் தாங்கிய படையினரை ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் நிறுத்தி வைத்திருக்கிறோம். மேலும் பலப்படுத்த அரசாங்கம் தீவிர யோசனை செய்து கொண்டிருக்கிறது.

Dealers in rationed articles

*207 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

whether the High Court has set aside the order of the Civil Supplies authorities, cancelling in some cases or suspending in others the authorisation granted to dealers to supply rationed articles against ration cards alloted to them in Madras City during the month of June, 1969?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.